நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.151/2021
அரசு தரப்புக்காக அ.சா. 3 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாண்டியன் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 3 | | | |

எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day of January 2026.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 03.51 )

நான் தற்போது அரியலூர் மாவட்டம் பெரிய ஆத்துக்குறிச்சியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.2 எனது மனைவி. அ.சா.1 எனது மாமியாரின் தம்பி. இவ்வழக்கில் இறந்துபோன சாந்தி எனது மாமியார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. எனது மாமியார் முதலில் அ.சா.–டன் வசித்தார். அதன்பிறகு விருத்தாசலத்தில் வசித்தார். 12.11.2020 ஆம் தேதி அன்று அ.சா.1 எனக்கு போன் செய்து எனது மாமியார் வெட்டுப்பட்டு இறந்துகிடப்பதாக சொன்னார். நானும் எனது மனைவியும் விருத்தாசலத்திற்கு வந்து பார்த்தோம். எனது மாமியார் கழுத்து அறுபட்டு கத்தி குத்து காயத்துடன் ரத்த வெள்ளத்தில் இருந்தார். அதை பார்த்துவிட்டு நாங்கள் அ.சா.1–ஐ அழைத்து சென்று விருத்தாசலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். அதன்பிறகு எனது மாமியார் எப்படி இறந்தார் என்று அங்கு விசாரிக்கும்போது கிளி ஜோசியகாரர்கள் எனது மாமியார் வீட்டிற்கு வந்துபோனதாக சொன்னார்கள். எனது மனைவியும் எனது மகனின் ஜாதகத்தை எனது மாமியாரிடமும்

கொண்டுபோய் பார்த்தார். எனது மகனின் ஜாதகம் அங்கே தான் இருந்தது. எனது மாமியார் இறந்த பிறகு தான் எடுத்து வந்தோம். போலிசார் விசாரித்து கண்டுபிடித்து எதிரிகள் தான் இவ்வாறு செய்தார்கள் என்று அரஸ்ட் செய்தார்கள். முதல் நாள் இரவு எதிரிகள் எனது மாமியாருக்கு போன் செய்துள்ளார்கள். போலிசார் அதை வைத்து தான் எதிரிகளை கைது செய்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு மாமியார் இறந்த தகவல் எத்தனை மணிக்கு போன் வந்தது என்றால் காலை 06.00 மணிக்கு வந்தது. அ.சா.1 என்னிடம் போலிசார் சொன்னதாக சொன்னார்களா என்றால் இல்லை. பக்கத்தில் இருந்த இரண்டு பெண்கள் போன் செய்ததாக சொன்னார். கிளி ஜோசியம் எப்படி பார்ப்பார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். கிளி எடுத்து கொடுக்கும் படத்தை வைத்து எதிர் காலத்தை சொல்வார்கள் என்றால் சரிதான். கிளி ஜோசிய காரர்கள் ஜாதகம் பார்க்கமாட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கிளி ஜோசியம் வருடத்திற்கு ஒருமுறை தான் பார்ப்பார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது மாமியார் என்னிடம் போனில் தான் வீட்டிற்கு யார் வருவார்கள் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்த பின்னர் 10.00 மணிக்கு மேல் அனைவரையும் விசாரித்தார்கள். எனது மாமியார் என்ன வேலை செய்தார்கள் என்ற விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை. கிளி ஜோசியகாரர்கள் எனது மாமியார் வீட்டிற்கு வந்து செல்வார்கள் என்ற விவரத்தை நான் போலிசாரிடம் என்னை விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். முருகன் என்ற ஜோசியகாரர் அடிக்கடி வருவார் என்று போலிசார் என்னிடம் சொன்னார்களா என்றால் சொல்லவில்லை. 1—ம் எதிரியின் பெயரை எனது மாமியார் சொன்னார்களா என்றால் சொல்லவில்லை. எனது மாமியார் எனது மனைவிக்கு போன் செய்தாரா என்றால் அன்று இரவு செய்தார். எந்த நம்பரில் செய்தார் என்றால் எனது மாமியாரின் போன் நம்பர் எனக்கு தெரியாது. எனது போனில் தான் எனது மனைவியிடம் பேசினார். எனது போன் நம்பர் என்ன என்று கேட்டால் 9585846442. எனது மாமியாரின் உடலை நான் பார்க்கபோகும் போது யாரும் இல்லையா என்று கேட்டால் 20 நபர்களின் கூட்டம் இருந்தது. போலிசார் எனது மாமியாரின் உடலை எத்தனை மணிக்கு அப்புறப்படுத்தினார்கள் என்றால் மதியம் 02.00 மணிக்கு அப்புறப்படுத்தினார்கள்.

போலிசார் என்னை விசாரித்தபோது எனது மாமியார் யாரோ ஒரு நபர் கத்தியால் குத்தியதால் இறந்துவிட்டார் என்று சொன்னார்களா என்றால் சொன்னார்கள். இரண்டு எதிரிகளும் சேலத்தை சேர்ந்தவர்கள் என்றால் எனது மனைவியிடம் எனது மாமியார் போனில் சொன்ன விவரங்களை வைத்து நான் சொல்கிறேன். எனது மாமியார் வீட்டில் தான் ஜோசியம் பார்ப்பதாக சொன்னார். எனது மாமியாரின் உடலை பார்க்க நாங்கள் மதியம் 02.00 மணிக்கு தான் சென்றோம் என்றால் சரியல்ல. போலிசார் எதிரிகள் மீது பொய் வழக்கு போட்டதால் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

(முடிக்கப்பட்ட நேரம் 04.09)

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.